**கவனிக்க.-** *2015.06.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1921 - 2015 ජූනි මස 26 වැනි සිකුරාදා - 2015.06.26**

*1921 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 966 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 971 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 5.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | பிங்கிரிய | குருநாகல் மாவட்டத்தின் கட்டுகம்பள ஹத்பற்று பிரிவின் கரதாபற்று கோறளை பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

6-626

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - யாழ்ப்பாணம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 5.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | வேலணை | புங்குடுதீவு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பிரிவு | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |

6-627

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஆடி மாதம் 27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஆனி 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | கொழும்பு (சென். செபஸ்தியன் பிளேஸ்) பிரிவில் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 5 |

6-823

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஆடி மாதம் 27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஆனி 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | நீர்கொழும்பு | நீர்கொழும்பு நகர (வைத்தியசாலை) பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கம்பஹா |

6-824

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | குருநாகல் | குருநாகல் மாவட்டத்தின் மஹகல்பட மெகொட வடக்குக் கோறளைப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வேஉடவில்லி ஹத்பற்று பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாகம், குருநாகல் |

6-750

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூலை மாதம் 27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 10.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி மாவட்டத்தின் காலி நகரம் வடக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |
| காலி | நெலுவ | காலி மாவட்டத்தின் ஹாப்பிட்டி பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹினிதும்பற்று பிரிவின் விவாகப் (பொது) பெதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

6-751

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுத்தல் – 2016 ஆம் கல்வி ஆண்டு

1. 2016 ஆம் கல்வி ஆண்டில் நடைபெறும் ஒரு வருடகால பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி (உள்வாரி) முழுநேர பாடநெறியைத் தொடர்வதற்கு தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பாடநெறி கொழும்பு, பேராதனை மற்றும் யாழ் பல்கலைக்கழகங்களில் நடைபெறும்.

3. அவ்வப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் மொழி மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பாடநெறிக்காக ஒரு மொழி மூலம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் :

(1) கொழும்புப் பல்கலைக்கழகம் – சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி மூலம்
(2) பேராதனைப் பல்கலைக்கழகம் – சிங்கள மொழி மூலம்
(3) யாழ் பல்கலைக்கழகம் – தமிழ்மொழி மூலம்

4. சகல விண்ணப்பதாரர்களும் தாம் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர் என்பதனை உறுதிசெய்ய வேண்டும்.

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசையாக இருக்க வேண்டும்.
(ii) 2015.07.24 ஆந் திகதியன்று 50 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.
(iii) நன்னடத்தை உள்ளவராகவும், சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருக்கவேண்டும்.
(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருக்கவேண்டும்.
(v) கீழ்க் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் :

(அ) * இலங்கை ஆசிரியர் சேவை
* இலங்கை தனியார் பாடசாலை ஆசிரியர் சேவை
* இலங்கை பிரிவெனா ஆசிரியர் சேவை
(ஆ) இலங்கை அதிபர் சேவை
(இ) இலங்கை கல்வி நிர்வாக சேவை
(ஈ) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை

(vi) பட்டத்திற்குப் பின்னர் 2015.07.24 ஆந் திகதியன்று இலக்கம் 4(v) இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் பட்டதாரியாக ஒரு வருடகால சேவைக்காலத்தை பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை :**

(1) கற்பித்தலில் தேசிய டிப்ளோமாவுக்கான ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் 2015.07.24 ஆந் திகதிக்கு ஒப்பந்த முறியின்படி தமது கட்டாய சேவைக்காலமான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

(2) கற்கை விடுமுறை பெற்று பிணைமுறிக்கு உட்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் 2015.07.24 ஆந் திகதிக்கு பிணை முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்து அல்லது அவ்வாறின்றேல் ஐந்து வருடங்கள் (05) பூர்த்திசெய்திருப்பின் மாத்திரம் விண்ணபிக்க தகைமை பெறுவர்.

(3) கல்விமானி பட்டதாரிகள் இப்பாடநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பிக்க முடியாது

5.1. **தேர்ந்தெடுக்கும் ஒழுங்குமுறை :**

(i) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் 4(v) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரி உள்ளடங்கும் சேவைக்கான பதவியின் சேவைக்காலத்திற்காக நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும். சேவைக்காலத்தின் ஒரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். சேவைக்காலத்திற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சப் புள்ளிகள் 40 ஆகும். விண்ணப்பதாரியின் சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது அவர் உரிய பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற தினம் தொடக்கம் ஆகும்.

(iv) எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் சேவைக்காலத்திற்காகக் கிடைக்கும் புள்ளிகள் ஆகியவற்றின் மொத்தம் இறுதிப் புள்ளிகளாகக் கருதி அப்புள்ளிகளின் தொடருக்கமைய பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்படும்.

(v) உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கையில் 1% இவர்களுக்காக ஒதுக்கப்படும்.

(vi) பாடநெறியைத் தொடர்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கை அவ்வப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் இடவசதிகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

5.2 **எழுத்துமூலப் பரீட்சை :**

(i) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் கொழும்பு மற்றும் யாழ் நகரங்களில் நடைபெறும்.

(ii) மேற்கூறப்பட்ட 02 மத்திய நிலையங்களில் தாம் விரும்பும் மத்திய நிலையத்தில் விருப்பமான மொழிமூலம் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் பின்னர் மாற்றியமைக்கப்படமாட்டாது.

(iii) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்டு பரீட்சார்த்தி செயற்படவேண்டும்.

(iv) எழுத்துமூலப் பரீட்சை வினாப்பத்திரம் இரண்டு பிரிவுகளாக அமையும்.

(அ) **பொது அறிவு**.- சமகாலத் தகவல்கள் பொதுஅறிவு, கல்வித் தகவல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான வினாப்பத்திரம் (01 மணித்தியாலம்)

(ஆ) **பொது உளச்சார்பு**.- மொழி அறிவு, விளக்கம், விவாதிக்கும் திறமை, புள்ளிவிபர ரீதியிலான திறமை போன்றவைகளை உள்ளடக்கியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். (நேரம் 1 1/2 மணித்தியாலம்)

5.3. **நேர்முகப்பரீட்சை :**

(i) நேர்முகப்பரீட்சையின்போது பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4வது வாசகத்திற்கமைய தாம் பாடநெறியைத் தொடரத் தகைமை பெற்றவர் என உறுதிசெய்ய வேண்டும்.

(ii) பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4(v) இற்குரிய பதவியின் சேவைக்காலத்தை உறுதிசெய்வதற்கு உரிய ஆவணங்களை நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். விசேடமாக பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற தினம் நேர்முகப்பரீட்சையின் போது உறுதிசெய்யப்பட வேண்டும். இது பரீட்சார்த்திக்கு சேவைக்காலத்திற்குரிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவியாக அமையும்.

(iii) பிரிவெனா மற்றும் அரச அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலிருந்து பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள்:-

(அ) பாடநெறிக்காக விடுவிப்பதாகவும்,
(ஆ) பாடநெறியை தொடரும் காலத்திற்குள் சம்பளம் செலுத்துவதாகவும்,
(இ) பாடநெறியின் இறுதியில் ஆசிரியரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதாகவும்,
(ஈ) குறித்த ஆசிரியரின் கற்கைக் கால எல்லைக்குள் அவரது வெற்றிடத்திற்கு வேறு ஆசிரியர் ஒருவரை இணைத்துக்கொள்வதில்லை என்றும்
(உ) ஆசிரியரின் பணிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதாகவும் பதிவாளர் / நிர்வாக சேவை முகாமையாளர்களினால் உறுதிசெய்த அறிக்கைப் படிவத்தை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

6. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கவேண்டிய முறை :**

(i) வழங்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும்.

(ii) கட்புலன் / செவிப்புலனற்ற / ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்களுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் இடதுபக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தினால் "கட்புலனற்ற/ செவிப்புலனற்ற/ ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரிகள்" எனக் குறிப்பிட வேண்டும்.

(iii) ***பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்.***- பரீட்சைக் கட்டணமாக ரூ.750/- பணத்தை அருகாமையில் உள்ள தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக உள்ள கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும். 2015.06.26 ஆந் திகதி தொடக்கம் 2015.07.24 ஆந் திகதி வரை சகல தபால் அலுவலகங்களிலும் இப்பற்றுச்சீட்டை வழங்குவதற்காக ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களத்தினால் தபால் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) ***விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :***

(அ) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழு நேரம் - 2016" பாடநெறி எனக் குறிப்பிட வேண்டும்.

(ஆ) 2015.07.24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டுச் சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

(இ) சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை விண்ணப்பதாரியின் சுய விபரக்கோவைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படின் கடமை விடுமுறை பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துவதற்கு இவ்விண்ணப்பப்படிவம் பயன்மிக்கதாக அமையும்.

(v) நேரசூசி மற்றும் அனுமதிப்பத்திரம் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுவதுடன் தமது அனுமதிப்பத்திரம் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் 07 நாட்களுக்கு முன்னர் கிடைக்காதபட்சத்தில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு அது தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகவல்களுடன் அறிவித்தல் வேண்டும் :

(அ) பரீட்சையின் பெயர் :----.
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :----.
(இ) முகவரி :----.
(ஈ) பணம் செலுத்திய தபால் அலுவலகம் மற்றும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இலக்கம் :----.
(உ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட திகதி :----.
(ஊ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட அலுவலகம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம்.

(vi) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீண்டும் திருப்பிச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றியமைக்கப்படவோ மாட்டாது

(vii) முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(viii) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சையின் போது தமது அடையாளத்தை செல்லுபடியாகும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(ix) உரிய பாடநெறியைத் தொடருவதற்கு விண்ணப்பதாரர்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

(x) தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரும் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்யவில்லை என தெரியவரும் பட்சத்தில் அவ்வாறான பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுப்பதிலிருந்து இரத்துச்செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

7. **கற்கை விடுமுறை**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறியைத் தொடர்வதற்காக முழுமையான சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இதற்காக இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள், தேசிய பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்கள், தனியார் பாடசாலை, பிரிவெனாக்களில் சேவையாற்றும் பணியாளர்களின் கற்கை விடுமுறையினை கல்வி அமைச்சின் செயலாளரினாலும் ஏனைய விண்ணப்பதாரர்களின் கற்கை விடுமுறை மாகாணக் கல்விச் செயலாளர்களினாலும் அங்கீகரிக்க வேண்டும்.

8. **பிணை முறி**.- பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின் அவர் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ஒழுங்குவிதி முறைகளுக்கமைய குறிப்பிட்ட காலத்திற்கு திணைக்களத்தில் சேவையாற்றுவதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /கல்விச் செயலாளருடன் பிணை முறியில் ஒப்பமிட வேண்டும்.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யாது உரிய கால எல்லைக்குள் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அக்கற்கை விடுமுறைக்காலத்திற்குள் அவருக்கு செலுத்தப்பட்ட முழுமையான சம்பளம் மற்றும் கொடுப்பனவு மீண்டும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

10. பாடநெறியைத் தொடரும் காலத்தில் மாணவர்களின் செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், வரவு திருப்தியளிக்காத பட்சத்தில் அவர்கள் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமைகள் இருப்பின் சிங்கள மொழி வாசகங்களே செல்லுபடியாகும்.

உபாலி மாறசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு
'இசுருபாய',
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 26.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

2016 ஆம் கல்வி ஆண்டுக்காக பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்காகத் தேர்ந்தெடுத்தல்

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

| விண்ணப்பிக்கும் மொழி மூலம் (சிங்களம் /தமிழ்) | விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் (கொழும்பு / யாழ்ப்பாணம்) | விண்ணப்பிக்கும் பல்கலைக்கழகம் (கொழும்பு / யாழ்ப்பாணம்) பேராதனை) |
|---|---|---|
| | | 1. |
| | | 2. |

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில் (முதல் எழுத்துக்கள் பின்னால்) :
……………………………………………………
உ-ம் : Mr. SILVA, A.B.C

(ii) முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2. (i) (அ) அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.
(ஆ) அலுவலகத் தொலைபேசி இலக்கம் :----.

(ii) (அ) சொந்த முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.
(ஆ) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.

(iii) சேவையாற்றும் பாடசாலை / நிறுவனத்தின் அமைவிடம் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

| மாகாணம் | மாவட்டம் | வலயம் |
|---|---|---|
| | | |

(iv) நிறுவனத்தின் தன்மை (அரச பாடசாலை/தனியார் பாடசாலை /பிரிவெனா/ஏனையவை)

3. (i) பிறந்த திகதி :
ஆண்டு :...................... மாதம் :...................... திகதி :...................

(ii) 2015.07.24 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :..................... மாதங்கள் :................ நாட்கள் :.................

(iii) பால்: (ஆண் /பெண்)

4. பட்டம் தொடர்பான விபரம் :

| பட்டம் | பல்கலைக்கழக பாடநெறியைத் பயின்ற காலம் (.......... தொடக்கம் .......... வரை) | பட்டம் பெற்ற ஆண்டு | பட்டம் செல்லுபடி யாகும் தினம் | பட்டத்திற் கான பாடங்கள் | சித்தியின் தரம் | நிறுவகம் / பல்கலைக்கழகம் | பட்டம் உள்வாரி / வெளிவாரி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

5. (i) (அ) இலங்கை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஆ) இலங்கை ஆசிரியர் சேவையில் கடமையைப் பொறுப்பேற்ற திகதி :----.

(இ) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) (அ) இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஆ) இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிருவாக சேவையில் கடமையை பொறுப்பேற்ற திகதி :----.

(iii) பட்டத்திற்கு பின்னர் இலங்கை ஆசிரியர் சேவை /இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிருவாக சேவையின் பதவியில் 2015.07.24 ஆந் திகதியன்று சேவைக்காலம் :-

(iv) இலங்கை ஆசிரியர் சேவை /இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிருவாக சேவையில் மொத்த சேவைக்காலம் :- 2015.07.24 ஆந் திகதி வரை மொத்தமான சேவைக் காலம்.

6. தொழிற்பயிற்சி தொடர்பான விபரம் :

| பாடநெறியைத் தொடர்ந்த நிறுவகம் (ஆசிரிய கலாசாலை/தேசிய கல்வியியற் கல்லூரி/ ஏனையவை) | பாடநெறி (பாடத்துறை) | நிறுவனத்தில் பாடநெறியை பயின்ற கால எல்லை | |
|---|---|---|---|
| | | திகதி தொடக்கம் | திகதி வரை |
| | | | |

7. பெற்றுக்கொண்ட கற்கை விடுமுறை தொடர்பான விபரங்கள் :

| விடுமுறை பெற்றதற்கான காரணம் | முறிக்காலம்...................... திகதி தொடக்கம் ...................... திகதி வரை | முறியை பூரணப்படுத்த எஞ்சியுள்ள காலம் |
|---|---|---|
| | | |

**குறிப்பு** : தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் தேசிய போதனாவியல் டிப்ளோமாப் பாடநெறியைப் பயிலும் காலஎல்லை கற்கை விடுமுறையாகக் கருதப்படமாட்டாது.

8. (அ) விண்ணப்பதாரிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் உள்ளனவா? அவ்வாறிருப்பின் அது தொடர்பான தகவல்கள் :

(ஆ) ஆம், எனின் எதற்காக ......................................................

9.

| | |
|---|---|
| தபால் அலுவலகத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும் | ...................... திகதிய பற்றுச்சீட்டு இலக்கம் ...................... இன் கீழ் ...................... தபால் / உபதபால் அலுவலகத்திற்கு ரூ............. (எழுத்தில்) செலுத்தப்பட்டதனை உறுதிசெய்கிறேன்.<br><br>விண்ணப்பதாரரின் கையொப்பம் :----<br>திகதி :----. |

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதும் உண்மையானதும் என்றும் 2015.06.26 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 4வது வாசகத்திற்கமைய எனக்கு இப்பாடநெறியைத் தொடர்வதற்காக தகைமை உள்ளது என்றும் பரீட்சை சட்டக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்குவதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி செல்லுபடியாகும் பற்றுச்சீட்டை இணைத்துள்ளதாகவும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **பாடநெறிக்காக நிறுவனத்திலிருந்து விடுவிப்பதற்கான பரிந்துரை :**
(அதிபர், பீடாதிபதி, பதிவாளர், நிருவாக சபை முகாமையாளர் அல்லது திணைக்களப் பொறுப்பாளர்)
மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தொழிற்பயிற்சிப் பாடநெறியை தொடரும் தேவையை கருத்திற்கொண்டு இவ்விண்ணப்பதாரியை விடுவிக்கிறேன் /விடுவிக்கவில்லை.

----,
அதிபரின் /நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

12. **பாடநெறிக்கு ஆசிரியரை விடுவிப்பது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு:**

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியை தொடர்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அவருக்கு கல்வி விடுமுறை வழங்குவதற்கு சிபாரிசு செய்கின்றேன்.

----,
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :----.

7-795

---

## திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை

### 2015 ஆம் ஆண்டின் இரண்டாம் அரை ஆண்டிற்கான பயிலுநர்களை இணைத்துக் கொள்ளுவதற்கான அனுமதி

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நாடுபூராகவுமுள்ள தேசியதொழிற்பயிற்சி நிலையங்கள்,மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்படும் ஏனைய தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் பயிற்சி சம்பந்தமாக 2015 ஆம் ஆண்டின் பயிலுநர்களை இணைத்துக் கொள்ளல் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறும் NVQ (தேசிய தொழிற் தகைமை) பாடநெறி, NVQ அல்லாத பாடநெறி குறியீட்டு இலக்க அடிப்படையில் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது. NVQ மட்டம்,பாடநெறி காலம்,பாடநெறி கட்டணம் என்பன குறிக்கபட்டுள்ளன.

**பாடநெறி சம்பந்தமாக அனுமதி.**- மாவட்ட மட்டத்தில்,தேசிய தொழிற் பயிற்சி நிலையங்களின் முகவரி, பாடநெறிகள் குறியீட்டு இலக்க அடிப்படையில் கீழ்வருமாறு காணப்படுமிடத்து தாங்கள் விரும்பும் பாடநெறியினை தெரிவு செய்து குறிக்கப்பட்ட மாவட்ட/தேசிய தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பதிவு தபாலில் விண்ணப்பபடிவத்தினை அனுப்பி வைக்கவும்.இத்தோடு முன்வைக்கப்படும் மாதிரி

விண்ணப்பபடிவத்திற்கேற்ப (13"X8") அளவில் அனுப்பி வைக்கவும். தாங்களால் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்கத்தின் மூலையில் "பயிலுநர் இணைத்துக்கொள்ளல் - 2015" எனக்குறிக்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பபடிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி | - | 2015.07.07 |
| பாடநெறி ஆரம்பம் | - | 2015.07.20 |
| மேலதிக விபரங்களுக்கு : | | |
| தொலைபேசி இல. : | - | 011-2505123 |
| | - | 011-7270270 |
| தொலைநகல் இல. : | - | 011-2502342 |
| E.mail | - | cgjp@vtasl.gov.lk |
| மின்னஞ்சல் முகவரி | - | www.vtasl.com |
| முகப்புத்தகப் பகுதி | - | www.facebook.com/vtasl |

தலைவர்,
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை,
4ஆம் மாடி ,
"நிபுணதா பியச",
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 05.

***பயிற்சியுடன் உமக்கு :***

- பயிற்சி நிலைய பயிற்சியின் போது பயிலுநர்களுக்கு முழுக் காப்புறுதி
- தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி (CBT) கீழ் பயிற்சியினை தொடர்தல்.
- தேசிய தராதரமட்டத்திலான (NVQ)சான்றிதழ் மட்டம் 3, 4 பெற்ற பின் டிப்ளோமா,உயர் டிப்ளோமா உடன் தொழில்நுட்ப உயர்பட்டம் பெறுவதற்கான சந்தர்ப்பம்.
- விசேடமாக சில பாடநெறிகளுக்கு மாதம் 1000/- இலிருந்து 2000/- வரை உதவுத்தொகை. (கட்டிட நிர்மாணம் மேசன், நீர்க்குழாய் பொருத்துனர், தளபாட உற்பத்தியாளர் தளபாட பூ செதுக்கல் வேலையாளர், ஒட்டுவேலை செய்பவர்(இரும்பு) பாடநெறிகளுக்காக 2000 ரூபாவும் ஏனைய அனைத்து இலவச பாடநெறிகளுக்கும் 1,000 ரூபாவும் உதவுத்தொகையாக வழங்கப்படும் )
- குறைந்த கட்டணத்திலான (இ.போ.ச.) பருவச்சீட்டு
- பயிற்சி சேவைகளும், ஆங்கில பயிற்சியும்
- தொழில் வழிகாட்டல் சேவைகள்
- பயிற்சி சம்பந்தமான மேலதிக அறிவு
- இலவச காப்புறுதி

***பயிற்சியின் பின் உங்களுக்கு :***

- உதவித் தொகையுடன் மேலதிக பயிற்சி
- அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- வெளிநாட்டு வேலைக்கு போகக்கூடிய வாய்ப்பு
- சுயதொழில் வாய்ப்புக்கள்
- சிறிய, மத்திய அளவிலான வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளும்,கடன் வசதிகளும் பெற்றுக்கொடுத்தல்.
- வியாபார சம்பந்தமான ஆலோசனை சேவைகள் பெற்றுக்கொடுத்தல்.
- குறிக்கப்பட்ட பாடநெறியில் அதிகூடிய திறனை பெறுதல்.
- தொழில் கல்வியில் தொழில் நுட்பப் பட்டம் பெறுதல்.

| தொடர் இல. | பயிற்சி நெறி | தேசிய தொழில் தகைமை மட்டம் | காலம் (மாதங்கள்) | பயிற்சிக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | அலுமினியம் பொருத்தும் தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 2 | தன்னியக்க மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | III | 18 | 5,000 |

| தொடர் இல. | பயிற்சி நெறி | தேசிய தொழில் தகைமை மட்டம் | காலம் (மாதங்கள்) | பயிற்சிக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 3 | கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியலாளர் (மேசன்) - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 4 | கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியலாளர் (நீர்க்குழாய் பொருத்துதல்) - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 5 | சாரதிப்பயிற்சி (கனரக/ இலகுரக) வாகனம் - தேசிய சான்றிதழ் | Non | 3 | 10,500<br>12,000 |
| 6 | மின்னியல் மோட்டர் வைண்டிங் தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 7 | மின்னிணைப்பு தொழில் நுட்பவியலாளர் (வீட்டு) - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 8 | மின்னிணைப்பு தொழில்நுட்பம் (கைத்தொழில்) - தேசிய சான்றிதழ் | III | 18 | 4,500 |
| 9 | குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துனர் - தேசிய சான்றிதழ் | III | 18 | 5,000 |
| 10 | வானொலி, தொலைக்காட்சி மற்றும் அதனோடு இணைந்த உபகரணங்கள் திருத்துநர்- தேசிய சான்றிதழ் | III | 18 | 5,000 |
| 11 | அறை பராமரிப்பாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | 5,000 |
| 12 | உணவு மற்றும் குடிபான சேவகர் / உபசாரகர் - தேசிய சான்றிதழ் | III/IV | 12 | 6,000 |
| 13 | ஆடைத்தொழிற்சாலை தரக்கட்டுப்பாட்டாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 14 | காய்ச்சி இணைப்பவர் - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 15 | கைத்தொழில் துறைசார் தையல் இயந்திர இயக்குனர் | III/IV | 9 | இலவசம் |
| 16 | வெதுப்பக உற்பத்தியாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | 4,500 |
| 17 | வெதுப்பக உற்பத்தியாளர் - தேசிய சான்றிதழ் | IV | 12 | 7,500 |
| 18 | சமையலாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | 4,500 |
| 19 | சமையலாளர் - தேசிய சான்றிதழ் | IV | 12 | 7,500 |
| 20 | தையல் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்) - தேசிய சான்றிதழ் | IV | 12 | 3,000 |
| 21 | தையல் (ஆண்கள்) - தேசிய சான்றிதழ் | IV | 12 | 2,500 |
| 22 | அழகுக்கலை நிபுணர் - தேசிய சான்றிதழ் | IV | 6 | 8,500 |
| 23 | சிகை அலங்கார நிபுணர் - தேசிய சான்றிதழ் | IV | 6 | 11,500 |
| 24 | தன்னியக்க மோட்டார்வாகன திருத்துனர் - தேசிய சான்றிதழ் | III | 18 | 5,000 |
| 25 | தன்னியக்க மோட்டார்வாகன மின்னியலாளர் - தேசிய சான்றிதழ் | III | 18 | 6,000 |
| 26 | தன்னியக்க மோட்டார்வாகன வர்ணம் பூசுபவர் - தேசிய சான்றிதழ் | III/IV | 12 | 3,500 |
| 27 | முச்சக்கரவண்டி திருத்துநர் - தேசிய சான்றிதழ் | III | 12 | 2,500 |
| 28 | மோட்டார் சைக்கிள் திருத்துநர் - தேசிய சான்றிதழ் | III | 12 | 2,500 |
| 29 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா - Level 5 | V | 24 | 42,000 |
| 30 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் - தேசிய தொழில் தகைமை மட்டம் IV | IV | 12 | 9,000 |
| 31 | கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் NVQ IV உடன் CISCO IT Essential / A Plus - தேசிய சான்றிதழ் | IV | 12 | 13,500 |
| 32 | கணினி கிரபிக்ஸ் வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ் | IV | 12 | 14,000 |
| 33 | CISCO | Non | 09 | 41,500 |
| 34 | தளபாட உற்பத்தி தொழில் நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 35 | விவசாய இயந்திர திருத்துனர் - தேசிய சான்றிதழ் | III | 18 | இலவசம் |
| 36 | வெளியக படகு இயந்திர திருத்துனர் - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 37 | செயலாண்மை பயிற்சி நெறி/ செயலாளர் | Non | 15 | 7,000 |
| 38 | இயந்திரவியலாளர் (பொது) | IV | 18 | 5,500 |
| 39 | அழகுக்கலை நிபுணர் - தேசிய சான்றிதழ் | III | 6 | 4,500 |
| 40 | சிகை அலங்கார நிபுணர் - தேசிய சான்றிதழ் | III | 6 | 5,500 |
| 41 | சமையல் கலைஞர் | Non | 8 | |
| 42 | உணவு மற்றும் பானங்கள் வழங்குனர் | Non | 8 | |
| 43 | உணவக முகாமைத்துவம் | Non | 8 | |
| 44 | அறை உதவியாளர் | Non | 8 | |
| 45 | முன்பள்ளி ஆசிரியர் | III | 18 | 6,000 |
| 46 | கணிய அளவையாளர் - தேசிய டிப்ளோமா | V | 24 | 62,000 |
| 47 | உதவி கணிய அளவையாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | 27,000 |
| 48 | நிலம் அழகுபடுத்துநர் | III / IV | 12 | இலவசம் |

| தொடர் இல. | பயிற்சி நெறி | தேசிய தொழில் தகைமை மட்டம் | காலம் (மாதங்கள்) | பயிற்சிக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 49 | தோற் பொருள் உற்பத்தி - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 50 | இயந்திரவியலாளர் (CNC) | | | 6000.00 |
| 51 | தளபாட பூ செதுக்கல் வேலையாளர் | | | இலவசம் |
| 52 | படவரைஞர் | IV | 12 | |
| 53 | மரக்கறி மற்றும் பழங்கள் பதனிடுதல் | III | 12 | இலவசம் |

| மாவட்டம்/தே. தொ. ப. நி. | பயிற்சி நெறி இல. |
|---|---|
| உதவிப்பணிப்பாளர், DVTC - அம்பாறை, நிந்தவூர், அம்பாறை, தொலைபேசி இல: 067-2250196 | 01, 02, 03, 04, 06, 07, 08, 09, 10, 11, 12,13,14, 15, 16, 17, 18, 19, 20, 21, 24, 25, 27, 28, 29, 30, 31, 34, 39, 40, 47 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - வவுனியா, இல 108, ஸ்டேசன் வீதி, வைரவப்புளியம்குளம், வவுனியா, தொலைபேசி இல: 024-2221617 | 01, 03, 04, 07, 14, 20, 27, 28, 30, 31, 32, 34, 39, 40, 49 |
| உதவிப்பணிப்பாளர், DVTC – திருகோணமலை, யொவுன் வீதி, கந்தளாய், தொலைபேசி இல: 026-2234517 | 01, 03, 04, 07, 08, 09, 19, 20, 27, 28, 30, 31, 32, 34, 35, 39, 40 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - முல்லைத்தீவு, மாங்குளம் வீதி, முல்லைத்தீவு, தொலைபேசி இல: 071-3641507 | 01, 04, 07, 08, 09, 14, 16, 20, 21, 24, 27, 28, 30, 31, 39, 40, 45 |
| உதவிப் பணிப்பாளர், VTC–மன்னார் இல. 108, ஸ்டேசன் வீதி, வைரவப்புளியம்குளம், வவுனியா, தொலைபேசி இல: 024-2221617 | 07, 20, 34, 39, 40 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - கிளிநொச்சி, 155 ஆம் கட்டை, A 9 வீதி, கிளிநொச்சி, தொலைபேசி இல: 021-2285686 | 01, 03, 04, 07, 08, 09, 14, 16, 20, 30, 31,34, 35, 39, 40, 52, 53 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - நுவரெலியா, வெடபன் வீதி, மவுண்ட் மேரி கட்டிடம், நுவரெலியா, தொலைபேசி இல: 052-2223216 | 01, 07, 08, 10, 11, 12, 13, 20, 22, 23, 24, 29, 30, 31, 37, 38, 48 |
| உதவிப் பணிப்பாளர், DVTC – யாழ்ப்பாணம், 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல 12,KKS வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல: 021-2227949 | 01, 03, 04, 06, 07, 08, 09, 10, 14, 20, 21, 24, 27, 28, 30, 31, 32, 33, 34, 35, 36, 39, 40, 42, 43, 44, 45 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - மட்டக்களப்பு, APC வீதி, வந்தாறுமுலை, மட்டக்களப்பு, தொலைபேசி இல: 065-2240159 | 01, 02, 03, 04, 06, 07, 08, 09, 10, 11, 12, 14, 16, 17, 18, 19, 20, 21, 24, 25, 26, 27, 28, 29, 30, 35, 36, 38, 39, 40, 46 |

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

*இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை*

**இரண்டாம் அரையாண்டுக்கான பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் - 2015**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. வதிவிடம் :----.
4. தொலைபேசி இலக்கம் :----.
5. பிறந்த திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை :----.
7. பெற்றுக்கொண்டுள்ள ஆகக்கூடிய கல்வி தகைமை :----.

உங்களது கல்வித்தகைமைக்கு ஏற்ப இணைந்து கொள்ள விரும்பும் பாடநெறி மற்றும் அவற்றை தொடர விரும்பும் பயிற்சி நிலையங்களை ஒழுங்காக குறிப்பிடுக :

| பாடநெறி | பயிற்சி நிலையம் |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியென உறுதிப்படுத்துகிறேன்.

...........................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

தங்களுடைய விண்ணப்பப்படிவத்தினை பாடநெறி தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்தின் உதவிப்பணிப்பாளரின் முகவரிக்கு 2015.07.07 ஆந் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

***பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளுவதற்கு தேவையான ஆகக்குறைந்த தகைமை க.பொ.த. (சா.தரம்) பரீட்சைக்கு தோற்றியிருத்தல்***

* கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் (மேசன்) தேசிய சான்றிதழ்
* கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் (நீர்க்குழாய் பொருத்துநர்) தேசிய சான்றிதழ்
* சூழல் அலங்காரவியல் - தேசிய சான்றிதழ்
* மர பூ செதுக்குதல்
* தளபாட உற்பத்தி தொழில்நுட்பவியலாளர் (தளபாடம் - 06)
* சாரதிப்பயிற்சி (இலகுரக) வாகனம் 18 வயதுக்கு மேல்
* சாரதிப்பயிற்சி (பார) வாகனம் 21 வயதுக்கு மேல்
* தன்னியக்க வாகன தகர வேலை செய்பவர்
* தன்னியக்க வாகன வர்ணம் பூசுபவர்
* மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர்
* முச்சக்கரவண்டி தொழில்நுட்பவியலாளர்
* தொழில்சார் உணவு மற்றும் குடிபான சேவை
* தோல் பாதணிகள் வடிவமைப்பு
* அலுமினியம் பொருத்துனர்
* ஒட்டுவேலை செய்பவர் (06 மாதம்)
* வரைபட கலைஞர்
* அழகுக்கலை நிபுணர்
* கேச அழகுபடுத்துனர்
* அதிவேக தையல் இயந்திர இயக்குனர்
* அதிவேக தையல் இயந்திர திருத்துனர்
* தையல் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்)
* தையல் (ஆண்கள்)
* திரைச்சீலை பிரிண்டிங்

*க.பொ.த. (சா.தரம்) 06 பாடங்களில் சித்தி பெற்றோர்*

- கட்டிட நிர்மாண முகாமைத்துவம்
- படவரைகலைஞர்
- மோட்டார் வாகன தொழில்நுட்பம்
- மோட்டார் வாகன மின்னியலாளர்
- மோட்டார் வாகன வாயு பொருத்துனர்
- மின்னியலாளர்
- மின் உபகரணங்கள் திருத்துனர்

*பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளுவதற்கு தேவையான ஆகக்குறைந்த தகைமை க.பொ.த(சா.தரம்) பரீட்சைக்கு தோற்றியிருத்தல்*

- மின்னிணைப்பாளர் (6 மாதம்)
- சமையற்கலையாளர் (6 மாதம்)
- வீட்டு மின் உபகரணங்கள் திருத்துனர்,மின்னியல் (6 மாதம்)
- அலுமினியம் பொருத்தும் தொழில்நுட்பம் (6 மாதம்)
- மின்னியல் மோட்டார் வைண்டிங் தொழில்நுட்பம்
- கட்டிட நிர்மாண ,தொழில்நுட்பம் (மேசன், மற்றும் நீர்க்குழாய் பொருத்துனர்)

*க.பொ.த(சா.தரம்) 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

கணினி வன்பொருள் தொழில்நுட்பம்
மோட்டார் வாகன தொழில்நுட்பம்
கணினி வடிவமைப்பாளர்
ஆடை வடிவமைப்பாளர்
ஆடைத்தொழிற்சாலை தரக்கட்டுப்பாட்டாளர்
ஆடைத்தொழிற்சாலை உற்பத்தி மேற்பார்வையாளர்
பப்ரிக் கட்டர்
பட வரைஞர்

*க.பொ.த(சா.தரம்) ஆங்கிலம் மற்றும் கணிதம் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT)

*க.பொ.த(சா.தரம்) ஆங்கிலம், கணிதம் , விஞ்ஞான பாடத்தில் விசேட சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ்

விண்ணபப்படிவங்களை 2015.07.07 திகதிக்கு முன்பாக தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்தின் உதவிப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும்.

*6-646*

---

**கல்வி அமைச்சின் "செயற்றிட்ட அதிகாரி" (முறைசாராக் கல்வி) பதவியில் உள்ளோருக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2014 (2015)**

மேற்படி பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கான உரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு/விதிமுறைகள் நியதிகளுக்கமைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2015, நவெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதோடு, பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல் களும் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் வேறாக அச்சிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்களை மீறினால் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

(iii) இந்தப் பரீட்சைக்காக கல்வி அமைச்சின்கீழ் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. **பரீட்சைக் கட்டணம்**.– முதலாவது முறையாக இந்த முழுப் பரீட்சைக்கும் அல்லது ஒரு பாடம் அல்லது பல பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதன் பின்னரான தடவைகளில் ஒரு பாடத்துக்கு மட்டும் தோற்றுவதாயின் 200 ரூபா பரீட்சைக் கட்டணமும் ஒரு பாடத்தைவிட கூடுதலான தொகைக்குத் தோற்றுவதாயின் 400 ரூபா பரீட்சைக் கட்டணமும் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003–02–13 இன்கீழ் அரசின் வருமானத்திற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த தபால்/ உப தபால் நிலையங்களிலும் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெறப்பட்ட பற்றுச்சீட்டை (அதன் ஒரு பக்கமாக) விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழராது ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக பணமோ அல்லது முத்திரைகளோ பொறுப்பேற்கப்பட மாட்டாது. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படவோ வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றம் செய்யப்படவோ மாட்டாது. (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமாகும்.)

4.1 **விண்ணப்பப்படிவம்**.– விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். இம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப ஏ4 அளவுத்தாளில் தயாரிக்கப்பட வேண்டியதோடு தலைப்பு இலக்கம் 1 இல் இருந்து 6 வரை முதலாம் பக்கத்திற்கும் மீதி இரண்டாம் பக்கத்திற்கும் வரும் வகையில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் அவசியமாகும். விண்ணப்பப்படிவத்தினைத் தட்டச்சு மூலம் தயாரித்துக்கொள்ள முடியுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் பூரணப் படுத்துதல் (நிரப்புதல்) வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப் பட்ட விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரிகளால் தமது வலயக் கல்விப் பணிப்பாளர்/ பீடாதிபதி/ திணைக்களத் தலைவர் ஊடாக 2005.08.11 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்குமாறு உதவிச் செயலாளர் (தாபனம்), கல்வி அமைச்சு, "இசுருபாய", பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். பூரணமற்ற தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்த லில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இணைவானதா என்பது பற்றி விண்ணப்பதாரிகளால் கவனிக்கப்படல் வேண்டும். அவ்வாறில்லையெனில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

4.2 **கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல்**.–விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பத் தைச் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும். ஏதாவது நிறுவனம் ஒன்றினால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

5. **விண்ணப்பதாரிகளின் ஆள் அடையாளம்**.– விண்ணப்பதாரி களால் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் சகல பாடங்களின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக கீழ்க்குறிப் பிடப்படும் ஆவணங்களில் ஏதாவது ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேலுள்ள ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரி களின் பரீட்சார்த்தத் தன்மை தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. விண்ணப்பப்படிவங்கள் அனுப்பியுள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசியின் பிரதியொன்றுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற உத்தியோகத்தர்களால் பரீட்சை மண்டப மேற்பார்வை யாளருக்கு அவர்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான அனுமதிப் பத்திரமின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட உடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நடைபெறும் தினத்துக்கு குறைந்தது 3 நாட்களுக்கு முன்னராவது தமது அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டபடி அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வதிபவராயின் அந்தத் தகவல்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரப் பிரதியொன்றைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ள தாகும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் எந்தத் தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிலிடும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை ஆயத்தமாக வைத்திருப்பது பயனளிக்கும்.

7. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உள்ள உத்தியோகத்தர் களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பயணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரமே பரீட்சை நடைபெறும். அவற்றில் தாம் கல்வி கற்ற மொழியிலோ அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்ற முடிவதோடு, தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றம்செய்ய முடியாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரமே நடைபெறும்.

10. **பரீட்சை ஒழுங்குகள்**.- மேற்படி பதவிகளுக்கான பரீட்சை கீழ்வரும் பாடங்களை உள்ளடக்கியுள்ளது :-

| விடயம் | பாட இலக்கம் | புள்ளி கள் | காலம் |
|---|---|---|---|
| 1. சாதாரண நிர்வாகம் (இலங்கை அரசிய லமைப்பு சட்டத் தின் ஏற்பாடுகள் மற்றும் பிரமாணங்கள்) | 01 | 100 | 1 1/2 மணித் தியாலயம் |
| 2. நிதிப் பிரமாணம் | 02 | 100 | 1 1/2 மணித் தியாலயம் |
| 3. கல்வி, கல்விச் சட்டகம், கல்விக் கோட்பாடுகள், முதியோர் கல்வி, நிர்வாகமும் மேற் பார்வையும் | 03 | 100 | 1 1/2 மணித் தியாலயம் |
| 4. ஆங்கில மொழி | 04 | 100 | 1 1/2 மணித் தியாலயம் |

(1) சாதாரண நிர்வாகம் :

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல மைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்துக்கு அதிக கவனம் செலுத்தி இலங்கையின் அரசியமைப்புச் சட்டம் மற்றும் மாகாண சபைச் சட்டங்கள் (திருத்தங்களுடன்) ;

(ஆ) மாகாண சபையினால் திருத்தப்பட்ட கட்டளைச் சட்டம் ;

(இ) தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் அலுவலக முறைமை தாபன விதிக்கோவை யின் I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய வகுதிகள்.

(2) நிதிப்பிரமாணங்கள் மற்றும் கணக்குச் செயற்பாடுகள் :

(அ) அரசின் நிதிப்பிரமாணம் (பகுதி - I) (Xவகுதி தவிர) ;

(ஆ) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சுக்கு அதிக அவதானத் தைச் செலுத்தி தற்போதைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவு மதிப்பீடு, அவற்றைத் தயாரித்தல், வருமானத் தலைப்பு, நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்) ;

(இ) மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகத்தி னூடாக மேற்கொள்ளக்கூடிய சரியான கணக்கு நடவடிக்கை களுக்கு உரியதான கட்டளைச் சட்டம் மற்றும் வேறு சட்ட ரீதியான ஏற்பாடுகளும் பிரமாணங்களும் ;

(ஈ) அரச திணைக்களங்களில் பயன்படுத்தப்படுகின்ற கணக்கு விடய நடவடிக்கைகள் ;

(உ) களஞ்சியசாலை சுற்றுநிருபம், கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களில் நிதி மற்றும் கணக்குப் பிரிவுகளுக்குரிய ஏற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் அதிகாரம் வழங்கப்படும் ஏற்பாடுகளும் பிரமாணங்களும் :

(3) கல்வி, கல்விச் சட்டகம், கல்விக் கோட்பாடுகள், முதியோர் கல்வி நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :

(அ) விண்ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்படும் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டங்கள் பற்றிய அறிவு மற்றும் விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும் :

* 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம்
* 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தப்பட்ட கல்விக் கட்டளைச் சட்டம்
* 1951 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
* 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
* அரச பாடசாலைகள் பற்றிய சட்டவாக்கக் கோவை
* 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
* 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள் (விசேட ஏற்பாட்டுகள்) சட்டம்
* 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப் பெயர் மாற்றம் செய்யும்) சட்டம்
* 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்க பரீட்சை (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைச் சட்டம்
* 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனாச் சட்டம் மற்றும் அதன் கீழ் வெளியிடப்பட்டுள்ள பிரமாணங்கள்
* 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டம்
* 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்
* 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம்
* 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபைச் சட்டம்
* கட்டாயக் கல்விப் பிரமாணம்
* சிறுவர் உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பாக ஆக்கப்படும் சட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள சட்டங்களின் திருத்தம்
* குழந்தைகள் அதிகார சபைச் சட்டம் மற்றும் படைச் சட்டம்.

(ஆ) கல்வி நிருவாகம் :

* கல்வி அமைச்சின் கொள்கை
* மாகாணக் கல்வித் திணைக்களம் உட்பட அமைச்சின் கீழ் உள்ள திணைக்களம் மற்றும் நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பு மற்றும் அலுவல்கள்
* தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கல்விசார் திட்டமிடல்
* குறிக்கோள் முறைமை (பாடசாலைத் திட்டமிடல் உட்பட) நடைமுறைப்படுத்தல் ஆகியன
* பாடசாலை முகாமைத்துவம் மற்றும் பாடசாலை சமூகத் தொடர்பு
* கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை
* விசேட கல்வி வேலைத்திட்டங்கள்

(இ) கல்வி மேற்பார்வை :

* பாடசாலை மேற்பார்வைக்கான முறை மற்றும் ஆசிரியர்களது செயலாற்றுகை மதிப்பீட்டுக்காக பயன்படுத்தப்படும் வரையறைகள் (தொழில் மீளாய்வு மற்றும் மீள் பயிற்சி வேலைத்திட்டங்கள்)
* பாடசாலைகளில் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்
* பாடசாலைகளில் சுயமதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்
* மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலைகளை மேற்பார்வை செய்தல்
* வெளிக்குழுக்களால் உள்ளக மதிப்பீட்டைப் பரீட்சித்தல்

(ஈ) முறைசாரா தொடர்ச்சியான மற்றும் விசேட கல்வி நிர்வாக அபிவிருத்தி மற்றும் மேற்பார்வை

(கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள், கைநூல்கள், வேறு வெளியீடுகள் பற்றி விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படும்.)

(4) ஆங்கில மொழிப் பாவனை :

* தொடர்பாடல் திறன்
* வியாபாரக் கடிதங்கள்
* இரு மொழி
* விண்ணப்பப்படிவங்கள்
* நேர்முகப் பரீட்சை
* அறிக்கை
* எளிய பந்தியைக் கொடுத்து பொருள் விளங்கியுள்ளதா எனப் பார்ப்பதற்கான சுருக்க வினா

(சித்தியொன்றைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தளவு புள்ளிகள் 40(%) வீதமோ அதற்கு அதிகமாகவோ உத்தியோகத்தரால் பெறப்படல் வேண்டும்.)

11. விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளார் எனக் கொள்ளலாகாது.

12. இந்தப் பரீட்சை அறிவித்தல் மூலம் வழங்கப்படாத எந்த விடயம் தொடர்பாகவும் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் வெளியிடப்படுகின்ற அறிவித்தலில் மொழிகளுக்கிடையேயான பொருத்தப்பாடின்மை ஏதும் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலை சரியானதாகக் கொண்டு செயற்படுத்தல் வேண்டும்.

எஸ். யூ. விஜேரத்ன,
மேலதிகச் செயலாளர் (திட்டமிடல்),
கல்விச் செயலாளர் (க. பா.),
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
“இசுருபாய”,
பத்தரமுல்லை,
2015, யூன் 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

கல்வி அமைச்சின் “செயற்திட்ட அதிகாரி” (முறைசாராக் கல்வி) பதவியில் உள்ளோருக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2014 (2015)

The First Efficiency Bar Examination for (Project Officers) (No. formal Education) in the Ministry of Education - 2014 (2015)

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA

1.2 பின்னுக்கு வரும் பெயரை முன்னாலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னாலும் இட்டுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் :- GUNAWARDANA, H. M. S. K.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. சேவை நிலையமும் முகவரியும் :
2.1 சேவை நிலையத்தின் பெயர் :----.
2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(இந்த முகவரிக்கு அனுமதிப்பத்திரம் தபாலிடப்படும்)

3. ஆண்/பெண் :

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. தற்பொழுது வகிக்கும் பதவி :----.
(நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைக்க.)

5.1 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.
5.2 நியமனத் திகதி :----.

6. நீர் தோற்றும் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடம்/பாடங்கள் :
(வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியைப் பார்க்க) :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையோன் எனவும் வெளிப்படுத்துவதோடு இந்தப் பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர் பாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஆக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் இணங்குகிறேன் என்பதை வெளிப் படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அந்நிறுவனத் தலைவருக்குப் பதிலாக ஒப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பம் இடப்படல் வேண்டும்.

| |
|---|
| பற்றுச்சீட்டை அதன் ஒரு பக்கமாக இங்கு ஒட்டுக.<br>(தேவையாயின் மட்டும்)<br>பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனளிக்கும் |

கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

எனது அலுவலகத்தின்/கல்லூரியின்/கல்விக் கல்லூரியின்/ஆசிரியர் கலாசாலையின்/ஆசிரியர் மத்திய நிலையத்தின்/உத்தியோகத்தர் ஒருவராகவும் நான் தனிப்பட்ட முறையில் தெரிந்தவருமான திரு./திருமதி/செல்வி ..............................., என்பவர் ............. ஆந் திகதியில் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்
(அருகிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(1) மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்களைப் பரீட்சித்துப் பார்த்தபடியும்,

(2) நியமனக் கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட்டுள்ளது எனவும்,

(3) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் எனவும்,

(4) உத்தியோகத்தர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை என்பதால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின்/வலயக் கல்விப்
பணிப்பாளரின்/பீடாதிபதியின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(தேவையற்றவைகளை வெட்டி விடவும்.)

6-769

---

## அரச கரும மொழிகள் திணைக்களம்

பொது நிர்வாக சுற்றுநிருபம் 01/2014 மற்றும் முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 04/2014 பிரகாரம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களம் அல்லது தமிழ் மொழியில் சித்தியடைந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச வங்கிகள் மற்றும் முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் உத்தியோகத்தர்களுக்கான வாய்மூலப் பரீட்சை - 2015

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி (பாட எண் 21 அல்லது 64) அல்லது தமிழ் மொழியை (பாட எண் 22 அல்லது 65) இரண்டாம் மொழியாக சித்தியடைந்த உத்தியோகத்தர்கள் பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 01/2014 மற்றும் முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 04/2014 இன் பிரகாரம் **அரச கரும மொழித் தேர்ச்சிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவதோடு, அவ்வுத்தியோகத்தர்கள் அரச கரும மொழிகள் திணைக்களத் தினால் நடாத்தப்படும் வாய்மூலப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.**

2. இப்பரீட்சையை 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் நடாத்துவதற்குரிய விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. அதற்காக விண்ணப்பிக்கக்கூடியவர்கள்–

* பொது நிர்வாக சுற்றுநிருபம் 01/2014 இன் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு திறந்த/மட்டுப்படுத் தப்பட்ட மற்றும் திறன்கள் அடிப்படையில் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட/நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும்,

* முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 04/2014 இன் பிரகாரம் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் முழுமை யாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் உத்தியோகத்தர்களுக்கு.

3. மாதிரி விண்ணப்பப்படிவம் இங்கு காட்டப்பட்டுள்ளதோடு அதனை www.languagesdept.gov.lk எனும் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள லாம். அதன் பிரகாரம் A4 அளவிலான தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி இலக்கம் 1 முதல் 7 வரை முதற் பக்கத்திலும், மிகுதிப் பகுதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தனியானதொரு தாளில் விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டும். அத்தோடு அதற்குரிய விபரங்களை தனது கையெழுத்திலேயே பூரணப்படுத்தல் வேண்டும். **விண்ணப்பிக்கும் மொழி மற்றும் தேர்ச்சி மட்டத்தைச் சரியாகக் குறிப்பிட வேண்டும் என்பதோடு பின்னர் அது குறித்த மாற்றங் களுக்கான கோரிக்கைகள் நிராகரிக்கப்படும். தனது சேவைக்குரிய அல்லது பதவிக்குரிய தேர்ச்சி மட்டத்தை மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.** நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட க. பொ. த. (சா. த.) பரீட்சை பெறுபேற்று சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

4. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமொன்றை செலுத்துதல் வேண்டும். கட்டணத்தைச் செலுத்த வேண்டிய முறை பின்வருமாறு :

* I ஆம் மட்டம் - 1,000.00 ரூபா
* II ஆம் மட்டம் - 700.00 ரூபா
* III ஆம் மட்டம் - 500.00 ரூபா
* IV ஆம் மட்டம் - 300.00 ரூபா

அக்கட்டணத்தை ''20.03.99.00 - வேறு வருமானம்'' எனும் தலைப்பிற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு மாவட்டச் செயலகத்திலோ அல்லது பிரதேச செயலகத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (அப்பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.)

5. மேற்குறித்த ஆலோசனைகளுக்கு அமைவாகப் பூரணப்படுத் தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை நிறுவனத் தலைவரின் சான்றுரை மற்றும் பதவி முத்திரையுடன் 2015.07.27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு 'பாஷா மந்திரய', இல. 341/7, கோட்டே வீதி, இராஜகிரிய'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''க. பொ. த. (சா. த.) வாய்மூலப் பரீட்சை - 2015 (....................... ஆம் மட்டம்)'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

6. இதற்கு முன்னர் வாய்மூலப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருப்பினும் நிராகரிக்கப்பட்ட அல்லது பரீட்சைக்குத் தோற்றாத அல்லது வாய்மூலப் பரீட்சையில் சித்தியடையாத உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்கு மீளவும் புதிதாக கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தல் வேண்டும்.

7. மேற்குறித்த ஆலோசனைகளுக்கு மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத அல்லது பூரணப்படுத்தப் படாத அல்லது பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஒட்டப்படாத அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சை பெறுபேற்று சான்றிதழை உண்மைப் பிரதியென நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்படாத அல்லது இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அத்தோடு அதற்கான மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் பரீட்சை நிலையமொன்றை அமைக்குமளவிற்கு போதிய விண்ணப்பதாரிகள் காணப்படாவிடின் அவர்கள் அதனை அண்மித்த மாவட்டத்தின் பரீட்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுவர்.

9. வாய்மூலப் பரீட்சைக்காக வழங்கப்படும் திகதி, நேரம் அல்லது பரீட்சை நிலையம் என்பன எந்தவொரு காரணத்திற்காகவும் மாற்றஞ்செய்யப்பட மாட்டாது. அத்தோடு பெறுபேறும் மீளாய்வு செய்யப்பட மாட்டாது.

10. இப்பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்கள் குறித்த இறுதித் தீர்மானம் அரச கரும மொழிகள் ஆணையாளருடையதாகும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரமாகும் இவ்வறிவித்தலின் மொழிகளுக்கிடையில் இணக்கப்பாடு அல்லது வேறுபாடு தென்பட்டால் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டத்தரணி டபிள்யு. ஏ. ஜயவிக்கிரம,
அரச கரும மொழிகள் ஆணையாளர்.

அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, 'பாஷா மந்திரய',
கோட்டே வீதி,
ராஜகிரிய,
2015, யூன் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச கரும மொழிகள் திணைக்களம்**

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழியில் சித்தியடைந்த
அரச/மாகாண மற்றும் கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட
நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கான வாய்மூலப் பரீட்சை - 2015

சிங்களம்/தமிழ் (மட்டங்கள் I, II, III, IV)

அலுவலக உபயோகத்திற்கு
............................................

மாவட்டம் : [ ]

(விண்ணப்பிக்கும் மாவட்டத்தைக் குறிப்பிடுக.)

பதவி/சேவைப் பெயர் : [ ]

பதவிக்குரிய சேவை :

| | |
|---|---|
| மத்திய அரச சேவை | - 1 |
| மாகாண அரச சேவை | - 2 |
| கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட நிறுவனம் | - 3 |

[ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

வாய்மூலப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

விண்ணப்பிக்கும் மட்டம் :
I ஆவது மட்டம் - 1
II ஆவது மட்டம் - 2
III ஆவது மட்டம் - 3
IV ஆவது மட்டம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

1. முதல் எழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம்- (SAMARASINGHE, S. A. S. K.) :----.

2. முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்)
உதாரணம்- (சமரசிங்ஹ ஆரச்சிகே சமன் குமார சமரசிங்ஹ) :----.

4. அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

5. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டையும் பெறுபேறுகளும் இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.)

6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

9. க. பொ. த. (சா. த.) பரீட்சை குறித்த விபரங்கள்
(பெறுபேற்றுச் சான்றிதழின் பிரதி நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தி இணைத்தல் வேண்டும்.)

9.1 பரீட்சை இலக்கம் :----.
9.2 தோற்றிய மொழியும் பாட எண்ணும் :----.
9.3 வருடம் :----.

10. பரீட்சைக் கட்டணம் : ................ ரூபா.
செலுத்திய அலுவலகம் :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். |
|---|

மேற்குறித்த விபரங்கள் சரியானவை எனவும், இம்மொழி தொடர்பான வேறு ஒரு மட்டத்திற்கு விண்ணப்பிக்கவில்லை எனவும், பரீட்சை குறித்த எந்தவொரு விடயம் தொடர்பிலும், அரச கரும மொழிகள் ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானத்தை இறுதித் தீர்மானமாக ஏற்றுக்கொள்கிறேன் எனவும், பரீட்சை சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுகிறேன் எனவும், இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் அனைத்து நிபந்தனைகளையும் வாசித்து புரிந்துகொண்டேன் எனவும் நான் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
கையொப்பம்.
(நிறுவனத் தலைவர் முன்னிலையில் கையொப்பமிடவும்.)

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சான்றுரை**

மேற்குறித்த விண்ணப்பதாரி எனது அலுவலகத்தில் சேவையாற்றுகின்றார் என்பதையும், விண்ணப்பப்படிவத்தில் 1 முதல் 10 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதையும், 01/2014 பொது நிர்வாக சுற்றுநிருபம் அல்லது 04/2014 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் அவர் 5 வருடங்களுக்குள் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்திசெய்தல் வேண்டும் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இங்கே ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், .............................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

6-827

---

## அரச கரும மொழிகள் திணைக்களம்

ஒரு அரச கரும மொழிக்கு மேலதிகமாக தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு அரச உத்தியோகத்தர்களுக்கு 5 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் பரீட்சை - 2015

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரினால் 2007.02.09 ஆந் திகதி வெளியிடப்பட்ட 03/2007 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒரு அரச கரும மொழிக்கு மேலதிகமாக தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒரு முறை மாத்திரம் வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியமற்ற சம்பளவேற்றத்திற்கு இணையான மாதாந்த கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. அச்சிறப்புரிமையைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு முறை அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

3. அதன் பிரகாரம் மேற்குறித்த சிறப்புரிமையைப் பெற்றுக்கொண்ட அல்லது தற்போது பெறும் உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சிக்கான பரீட்சையை 2015, செத்தெம்பர் மாதம் இத்திணைக்களத்தில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4. அதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

5. அதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவம் இங்கு காட்டப்பட்டுள்ள தோடு, அதனை இத்திணைக்களத்தின் www.languagesdept.gov.lk எனும் இணைய முகவரியினூடாக பெற்றுக்கொள்ள முடியும். அதன் பிரகாரம் A4 அளவிலான தாளில் இலக்கம் 1 முதல் 9 வரை முதல் பக்கத்திலும், மிகுதிப் பகுதியை இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தனித்தாளில் தயாரித்தல் வேண்டும் என்பதோடு, அதற்கான விபரங்களை தனது கையெழுத்திலேயே பூரணப்படுத்தல் வேண்டும். நிறுவனத் தலைவரின் சான்றுரை மற்றும் பதவி முத்திரையுடன் 2015.07.27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அரச கரும மொழிகள் ஆணையாளர், அரச கரும மொழிகள் திணைக்களம், "பாஷா மந்திரய", இல. 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "5 வருடங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படும் பரீட்சை - 2015" எனக் குறிப்பிடல் வேண்டும்.

6. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும். கட்டணத்தைச் செலுத்த வேண்டிய முறை பின்வருமாறு :-

* I ஆம் மட்டம் - 1,000.00 ரூபா
* II ஆம் மட்டம் - 700.00 ரூபா
* III ஆம் மட்டம் - 500.00 ரூபா

இக்கட்டணத்தை "20.03.99.00 - வேறு வருமானம்" எனும் தலைப்பிற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு மாவட்டச் செயலகத்திலோ அல்லது பிரதேச செயலகத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (அப்பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.)

7. மேற்குறித்த ஆலோசனைகளுக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கும் ஏற்ப தயாரிக்கப்படாத அல்லது பூரணமாக்கப்படாத அல்லது பணம் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்திராத அல்லது இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

8. இப்பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்கள் குறித்தும் அரச கரும மொழிகள் ஆணையாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். பரீட்சைக்காக வழங்கப்படும் திகதி, நேரம் அல்லது பரீட்சை நிலையம் என்பன எந்தவொரு காரணத்திற்காகவும் மாற்றஞ்செய்யப்பட மாட்டாது. அத்தோடு பெறுபேறும் மீளாய்வு செய்யப்பட மாட்டாது.

9. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரமாகும் இவ்வறிவித்தலின் மொழிகளுக்கிடையில் இணக்கப்பாடின்மை அல்லது வேறுபாடு தென்பட்டால் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டத்தரணி டபிள்யூ. ஏ. ஜயவிக்கிரம,
அரச கரும மொழிகள் ஆணையாளர்.

அரச கரும மொழிகள் திணைக்களம்,
'பாஷா மந்திரய', இல. 341/7,
கோட்டே வீதி,
ராஜகிரிய,
2015, யுன் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச கரும மொழிகள் திணைக்களம்**

ஒரு அரச கரும மொழிக்கு மேலதிகமாக தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு அரச உத்தியோகத்தர்களுக்கு 5 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் பரீட்சை - 2015

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

மாவட்டம் : [ ]
(சேவை நிலையம் உள்ளடங்கும் மாவட்டத்தைக் குறிப்பிடுக.)

ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

மட்டம் :

I ஆவது மட்டம் - 1
II ஆவது மட்டம் - 2
III ஆவது மட்டம் - 3 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

| |
|---|
| ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறும் மொழி மற்றும் மட்டத்தைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. |

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம்- GAMINI R. A. :----.

2. முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்) : (உதாரணம்- ரணதுங்க ஆரச்சிகே காமினி) :----.

4. அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்) :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. உங்களது சேவை உள்ளடங்குவது : (மத்திய அரச சேவை/மாகாண அரச சேவை) :----.

8. மொழி ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறும் பதவி :----.

9. மொழி ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கான தகைமை பெற்ற திகதி :----.

10. (i) நீங்கள் அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய திகதி :----.
(ii) வாய்மூலப் பரீட்சைக்குத் தோற்றிய திகதி :----.

(iii) அரச கரும மொழிப் பரீட்சை செல்லுபடியாகும் திகதி (பெறுபேற்றுக் குறிப்பில் காணப்படுமாறு) :----.

(iv) பரீட்சை சுட்டெண் :----.
(பெறுபேற்றுச் சான்றிதழின் பிரதியை நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தி இணைத்தல் வேண்டும்.)

11. பரீட்சைக் கட்டணம் : ............... ரூபா.
செலுத்திய அலுவலகம் :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். |
|---|

மேற்குறித்த விபரங்கள் சரியானவை எனவும், பரீட்சை குறித்த எந்தவொரு விடயம் தொடர்பிலும், அரச கரும மொழிகள் ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானத்தை இறுதித் தீர்மானமாக ஏற்றுக்கொள்கிறேன் எனவும், பரீட்சை சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுகிறேன் எனவும், இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் அனைத்து நிபந்தனைகளையும் வாசித்து புரிந்து கொண்டேன் எனவும் நான் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
கையொப்பம்.
(நிறுவனத் தலைவர் முன்னிலையில் கையொப்பமிடவும்.)

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேற்குறித்த விண்ணப்பதாரி எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்பதையும், விண்ணப்பப்படிவத்தில் 1 முதல் 11 வரை குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதையும், அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் மொழியில் அலுவலக நடவடிக்கைகளில் (கடிதம் எழுதுதல்/மொழிபெயர்ப்பு/உரைபெயர்ப்பு/பொது மக்கள் தொடர்பாடல் நடவடிக்கைகள் முதலியன) குறித்த உத்தியோகத்தர் செயற்திறனான பங்களிப்பை வழங்குகிறார் என்பதையும், அவர் .............................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

6-828

---

## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

ஆரம்ப பகுதி தேர்ச்சியற்ற சேவை வகுதியைச் சேர்ந்த மின்வினைஞர் தரம் III பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2015

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆரம்ப பகுதி தேர்ச்சியற்ற சேவை வகுதியைச் சேர்ந்த மின்வினைஞர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்த்தலுக்காகத் தகைமைபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி தகைமைகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் மின்வினைஞர் தரம் III பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

2. **சம்பளத்திட்டம்.**- இலக்கம் 06/2006 (IV) மற்றும் 2007.08.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கேற்ப மின்வினைஞர் பதவியில் தரம் III, II, I மற்றும் விசேட தரங்களுக்கு உரித்தான மாதாந்த சம்பளத் திட்ட அளவுகள் :

ரூபா 12,210 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - 18,600 ரூபா.

ரூபா 13,510 ஐத் தாண்டிச் செல்வதற்கு தரம் II இற்குப் பதவி உயர்வையும் ;

ரூபா 14,900 ஐத் தாண்டிச் செல்வதற்கு தரம் I இற்குப் பதவி உயர்வையும் ;

ரூபா 16,560 ஐத் தாண்டிச் செல்வதற்கு விசேட தரத்திற்குப் பதவி உயர்வையும் பெறுதல் வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்து உடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். இது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பதவியாகும். எனினும் திணைக்களத்தின் கீழ் தீவின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்ற நியமிக்கப்படக்கூடும். இச்சேவை வகுதியின் தரம் III இற்கு நடாத்தும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்க்கப்படுவார்கள். 3 ஆண்டுகால தகுதிகூர் காலப்பகுதிக்கு உட்படுத்தப்படுவர்.

4. **தகைமைகள்.**- மின்வினைஞர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுவதற்காகப் பின்வரும் தகைமைகள் பொருந்தும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (அதன்படி வயது தொடர்பான தகைமை நிறைவேறுவது விண்ணப்பதாரிகளின் பிறந்த திகதி 1997.07.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முந்தியதாகவும் 1970.07.24 ஆந் திகதி அல்லது அதற்குப் பிந்தியதாகவும் இருந்தால் மாத்திரமாகும்.) ;

(ஈ) பின்வரும் கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :

கல்வித் தகைமைகள்.- கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சா. த.) ப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வாறு குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(உ) **தொழிற்றகைமைகள்.**- மேற்படி பதவிக்கு உரிய வகையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானித்துள்ளபடி தேசிய தொழிற்திறன்கள் (N. V. Q.) இரண்டாம் மட்டத் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் ;

(ஊ) **அனுபவம்.**- உரிய துறையில் பெற்றுள்ள அனுபவம் விசேட தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படும் ;

(எ) **உடற்றகைமைகள்.**- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்றவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதியளவான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

* சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய தகைமைகளை 2015.07.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

5. **பரீட்சை நடைமுறை**.- இது கட்டமைப்பு வகை நேர்முகப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படும் அதே சமயம் விண்ணப்பிக்கும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது :-

| புள்ளி வழங்கப்படுகின்ற பிரதான தலைப்புக்கள் | வழங்கப்படும் ஆகக் கூடிய புள்ளி |
|---|---|
| (i) மேலதிக கல்வித் தகைமைகள் | 40 |
| (ii) மேலதிக தொழிற்றகைமைகள் | 45 |
| (iii) அனுபவம் | 10 |
| (iv) ஆளுமை | 05 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளி வழங்குகின்ற பிரதான தலைப்புக்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய புள்ளி அளவுகளினுள், அப்புள்ளிகளை வழங்குவதற்கான விரிவான புள்ளித்திட்டமொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும். கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து நிலவும் வெற்றிடங்களுக்காக முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

6. **போலியான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பங்களை நிரப்பும்போது மிகக் கவனமாக, சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களின்படி யாதாயினும் விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் எனக் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் அல்லது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின்போது அல்லது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் பின்னர் கண்டறியப்படுமாயின், அவரது பரீட்சார்த்தத் தன்மையினை நிராகரிக்க முடியும். விண்ணப்பதாரி ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பொய்யானது எனக் கண்டறியப்படுமாயின் அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 250 ரூபாவாகும். இப்பணத்தைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் 2015.07.24 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் தீவிலுள்ள எந்த ஒரு அஞ்சல் நிலையத்திலோ அல்லது உப அஞ்சல் நிலையத்திலோ மாத்திரம் செலுத்த முடியும். அதற்காக வழங்கும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கட்டத்தில் கழன்றுவிடாது ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை எதிர்காலத் தேவைக்காக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) எக்காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாத அதே சமயம் காசுக்கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. விண்ணப்பப்படிவம் A4 (21 x 29 செ.மீ.) (சாதாரண அரைத்தாள்) அளவுடைய தாளை உபயோகித்து- (அ) இல. 1 தொடக்கம் 3 வரை பந்திகளைத் தாளின் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) இல. 4 தொடக்கம் 8 வரை பந்திகளைத் தாளின் இரண்டாம் பக்கத்திலும்,

(இ) இல. 9 தொடக்கம் 11 வரை பந்திகளைத் தாளின் மூன்றாம் பக்கத்திலும், அதன் பின்னரான பந்திகளை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வகையில் படிவம் தயாரித்துக்கொள்ளப்பட வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவங்களைத் தயார் செய்யும்போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

* குறித்த மாதிரிப் படிவத்துக்கு ஒவ்வாத, பிழையின்றி பூரணப் படுத்தப்படாத பூரணமற்ற தன்மையிலுள்ள விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தக்கவாறு விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தாமையால் ஏற்படுகின்ற நட்டங்களை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும் அதே சமயம் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவம் வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை ஒத்ததா என்பது பற்றி விண்ணப்பதாரியே தேடிப்பார்த்து உறுதிசெய்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையாயின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக்கூடும்.

8.1 அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லையினுள் அமையும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கடைசித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பதாக சரியான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், பிழையின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு கட்டமைப்பு வகை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டைகளை வழங்குதல் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தல்படியான தகைமை கொண்டவரா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை என கண்டறியப்படுமாயின் அவ்வாறானவர்களின் பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

8.2 விண்ணப்பம் அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மின்வினைஞர் பதவிகளில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கும் கட்டமைப்பு வகை நேர்முகப் பரீட்சை - 2015'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

8.3 விண்ணப்பப்படிவத்திலும் நேர்முகப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். யாதாயினும் நிறுவனமொன்றிலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் மூலமோ அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலமோ, அவ்வாறல்லாத விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர், ஒரு சமாதான நீதவான், பிரசித்த நொத்தாரிசு மூலம், பிரிவின் கிராம அலுவலர் மூலம், சட்டத்தரணி ஒருவர் மூலம், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர் மூலம், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் மூலம், பொலிஸ் சேவையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் மூலம், 2,40,260 ரூபா அல்லது அதற்குக் கூடிய திரட்டிய வருட சம்பளம் பெறுகின்ற அரச அல்லது மாகாண அரச சேவை உத்தியோகத்தர் ஒருவர் மூலம் அல்லது நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் மூலம், சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.4 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015.07.24 ஆகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அத்திகதியன்று அல்லது அதற்கு முந்திய தினத்தில் கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தபால் பெட்டி இலக்கம் 1503,
கொழும்பு.

9. **கட்டமைப்பு வகை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கிய உடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதிருக்குமாயின் அவ்வறிவித்தலில் குறிப்பிட்டிருந்தவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் பெயர், உங்கள் முழுப்பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டிய அதே சமயம் நீங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமொன்றிலுள்ள விண்ணப்பதாரியாயின், உங்களின் மேற்படி தகவல்கள் அடங்கிய கோரிக்கைக் கடிதமொன்றை தொலைநகல் மூலம் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்காக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, அக்கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைத் திணைக்களத்திற்கு முன்வைத்து விண்ணப்பித்தல் சிறந்தது. மேலும் உங்களின் தகவல்களை உறுதி செய்வதற்காக நீங்கள் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயாராக வைத்திருத்தல் பயன் உள்ளதாக அமையும்.

10. விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. ஒரு விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டையை வழங்குதல் அவர் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதாகக் கருதக்கூடாது. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுவர். அச்சட்டதிட்டங்களை மீறி நடந்தால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றுக்கு உட்பட நேரிடும்.

12. இங்கு குறிப்பிடப்படாத யாதாயினும் விடயமொன்று இருக்குமாயின், அது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் முடிவெடுக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சைகள் தொடர்பான சட்டதிட்டங்களுக்கேற்ப நடந்துகொள்ளவும் கட்டுப்பட்டுள்ளனர்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்**

ஆரம்ப பகுதி தேர்ச்சியற்ற சேவை வகுதியைச் சேர்ந்த மின்வினைஞர் தரம் III பதவிக்கு ஆட்சேர்த்தலுக்கான நேர்முகப் பரீட்சை - 2015

Primary Semi Skilled Service Category - Structured Interview for recruitment to the Post of Electrician Grade III - 2015

(தரப்பட்ட கட்டத்தினுள் சரியான குறியீட்டையும் எண்ணையும் தெளிவாகக் குறிக்க.)

☐
(அலுவலக உபயோகத்திற்காக)

கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(உரிய எண்ணைக் கட்டத்தில் எழுதுக.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(உதா :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 கடைசியாக வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னருமாக பெயரை ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும் (உதா:- GUNAWARDANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (தமிழில் அல்லது சிங்களத்தில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (தமிழில் அல்லது சிங்களத்தில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால் (ஆண்-0/பெண்-1) ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2015.07.24 ஆந் திகதிக்கு வயது-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 தொலைபேசி இல. :----.

☐☐☐☐☐☐☐☐☐☐

4. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

5. தொழிற் தகைமைகள் :

| பாடநெறி | பயின்ற வருடம் | தொழில்நுட்ப நிறுவனம் | NVQ மட்டம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

6. வேறு கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :--------------------
--------------------------------------------------------------
--------------------------------------------------------------
--------------------------------------------------------------
--------------------------------------------------------------

7. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் :----------------------
--------------------------------------------------------------
--------------------------------------------------------------
--------------------------------------------------------------

8. நீங்கள் என்றாவது எந்த ஒரு குற்றம் தொடர்பாகவும் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :

(உரிய கட்டத்தில் ✓ அடையாளமிடுக, ஆம் எனின் விபரங்கள் தருக) :

ஆம் ☐ இல்லை ☐

--------------------------------------------------------------
--------------------------------------------------------------

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய கட்டணம் :----.

| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டிவிடவும் |
|---|

10. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானதும் சரியானதும் என அறியத்தருகின்றேன். இங்கு யாதாயினும் ஒரு பகுதியை நிரப்பாமையால் மற்றும்/அல்லது பிழையாக நிரப்பியமையால் ஏற்படுகின்ற நட்டங்களை ஏற்றுக்கொள்ள நான் இணங்குகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளும் பிழையின்றி பூரணப்படுத்தப்பட்டுள்ளதெனவும் நான் அறியத்தருகின்றேன் ,

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள யாதாயினும் தகவல் பொய்யான தென நிரூபிக்கப்பட்டால், நியமனம் கிடைப்பதற்கு முன்னரான தகைமை இழந்தவனாவேன் எனவும், நியமனம் கிடைத்த பின்னராயின் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவேன் எனவும் நான் அறிவேன்,

(இ) மேலும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் உட்படுவேன் எனவும் அறியத்தருகின்றேன்,

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள எந்த ஒரு தகவலையும் நான் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ........................................, எனக்கு தனிப்பட்ட முறையில் அறிந்தவரும் எனக்குத் தெரிந்தவரும் ஆவார். அவர் எனது முன்னிலையில் .............................. ஆந் திகதி தனது கையொப்பத்தை வைத்தார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அதற்கான பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளார் எனவும், நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தைச் சான்றுப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
(பதவி இலச்சினை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)
திகதி :----.

12. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் : (அரச/மாகாண அரச/அரச கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரி களுக்கானது) :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ........................................................ இவ்வமைச்சில்/திணைக் களத்தில்/நிறுவனத்தில் ............................................... ஆக சேவையில் ஈடுபடும் அதே சமயம், அவரது விண்ணப்பத்தை விதந்துரைந்து சமர்ப்பிக்கின்றேன். மேற்படி பதவிக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்நிறுவன சேவையிலிருந்து அவரை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.
(பதவி இலச்சினை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

6-829

---

**சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

துணை மருத்துவத் துறையின்கீழ் குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கான பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு - 2015

சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் துணை மருத்துவத் துறையின்கீழ், கீழே குறித்த தொழிற்பயிற்சிக்காக பயிலுனர்களை இணைத்துக்கொள்வதற்காக 2010, 2011, 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் தகைமைகளைப் பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| குறியீட்டு இல. | தொழிற் பயிற்சியின் பெயர் | பயிற்சிக்கான காலம் | தொழிற்பயிற்சி வழங்கப்படும் மொழி |
|---|---|---|---|
| 1 | குடும்பநல உத்தியோகத்தர் | 1 1/2 வருடங்கள் (6 மாதங்கள் வெளிக்களப் பயிற்சி) | சிங்களம்-தமிழ் |

1. க.பொ.த.(உ.த.) பரீட்சையில் பெற்றுக்கொண்ட Z புள்ளிக்கமைய தயாரிக்கப்பட்ட முதன்மை அட்டவணை அடிப்படையில் 30% மும், மாகாண ரீதியில் தகைமை அடிப்படையில் 70% மும் தெரிவு செய்யப்படுவர். பயிற்சிக்காக மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கை அம்மாகாணத்திலுள்ள வரிசை அமைச்சின்கீழ் உள்ள மற்றும் மாகாணங்களுக்குரிய வைத்தியசாலைகள், தாபனங்கள் என்பவற்றின் வெற்றிடங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். பயிற்சிக்காக க.பொ.த.(உ.த.) Z புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு பல வருடங்களுக்குரிய எந்தவொரு பாடத்துறையிலும் உயர்தரப் பாடங்கள் 3 இல் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதால், பயிற்சிக்குத் தேவையான முழுப் பயிலுநர்களின் எண்ணிக்கையைத் தெரிவுசெய்வது மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் தகைமைகள் உள்ள மொத்த விண்ணப்பதாரிகளின் மொத்தத் தொகையில் அந்தந்த வருடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துறை யிலும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளின் சதவீதத்தினாலாகும். விண்ணப்பிக்கும் மாகாணத்தில் வெற்றிடங்கள் இல்லாவிடின் அந்த மாகாணத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் நாடளாவிய முதன்மை அட்டவணை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

2. இது ஒரு முழுநேரப் பயிற்சிநெறி என்பதால் வார நாட்கள் ஐந்துடன் சனிக்கிழமை காலை நேரத்தில் பல்கலைக்கழகம் அல்லது சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் அல்லது வேறு அரசாங்கத் தாபனங்களில் அல்லது வேறு எந்த முழுநேரப் பயிற்சி நெறியில் உள்ள மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது. யாராவது அவ்வாறு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அது வெளிப்படுத்துமிடத்து பயிற்சிநெறி/பதவியிலிருந்து நீக்கப்பட்டு அதுவரை அரசாங்கத்தால் அவருக்காகச் செலவு செய்த அனைத்துச் செலவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். பல்கலைக்கழகத்தில் முழுநேரப் பயிற்சிநெறியியல் உள்ள ஒருவர் இதற்கு விண்ணப்பிப்பா ராயின் அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் செயற்பட வேண்டும். சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் முழுநேரப் பயிற்சி நெறியில் பதிவுசெய்தவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2.1 எந்தத் தினத்திலாவது நீங்கள் எந்தவொரு பல்கலைக் கழகத்தில் அல்லது அரச தாபனத்தில் முழுநேரப் பயிற்சி நெறிக்கு பதிவு செய்திருப்பின் பயிற்சி நெறிக்கு இணைத்துக் கொள்ளும் திகதியாகும்போது அதை இரத்துச் செய்தல் வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்டு விரிவுரைகளுக்குச் செல்லாது இருப்பினும் நீங்கள் பல்கலைக்கழக மாணவராகவே கருதப்படுவீர்கள் என்பதால் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் தமது பெயர்ப் பதிவை இரத்துச்செய்து கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதி செய்வதற்கும் போதுமான ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

2.2 நீங்கள் யாதேனுமோர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பின் அந்தப் பட்டம் செல்லுபடியாகும் திகதி (Effective Date) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் திகதி அல்லது அதற்கு முந்தியதாக இருக்க வேண்டும்.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை :**

* மேற்குறிப்பிட்ட 2.1 இலிருந்து 2.2 வரையுள்ள நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் கட்டாய மாக நீங்கள் விண்ணப்பிக்கும் பயிற்சி நெறிக்காக இணைத்துக்கொள்ளப்படுகின்றீர்கள் என இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

* அந்த 2.1 இலிருந்து 2.2 வரையிலான நிபந்தனை களைப் பூர்த்தி செய்திருப்பினும் உங்களது தகைமை கள் போதியளவு Z புள்ளிகளைப் பெற்றில்லாவிடின் அல்லது இங்கு குறிப்பிட்டுள்ள வேறு நிபந்தனைகள் பூரணமில்லாதிருப்பின் எக்காரணங்கொண்டும் இப்பயிற்சி நெறிக்கு நீங்கள் தகைமையற்றவரென நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

* அதேபோல் நீங்கள் போதியளவு Z புள்ளிகளைப் பெற்றுள்ளவராகவும் மற்றைய அனைத்து நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தவராகவும் இருந்து 2.1 இலிருந்து 2.2 வரையான நிபந்தனைகள் பூர்த்திசெய்யாது இருப்பின் நீங்கள் எக்காரணங்கொண்டும் இப்பயிற்சி நெறிக்கு தகைமையற்றவரென நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

**கல்வித் தகைமைகளும் பதவிக்குத் தேவையான வேறு தகைமைகளும் :**

| இல. | பயிற்சி நெறி | க. பொ. த. (சா. த.) பெறுபேறு | க. பொ. த. (உ. த.) பெறுபேறு | பயிற்சிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | குடும்ப நல உத்தியோகத்தர் | சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி. | 2010, 2011, 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எந்தவொரு பாடத் துறையிலும் 3 பாடங்களில் சித்தி. | * பெண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும். * உயரம் 4 அடி 10 அங்குலமும் அதற்கு மேலும். * சகல விண்ணப்பதாரர்களும் விவாகம் ஆகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிற்சிக் காலத்திலும் உள்ளக பயிற்சிக் காலத்திலும் நியமனம் பெறும் வரை விவாகமாக முடியாது. |

**4. ஏனைய தகைமைகள் :**

(அ) 24.07.2015 ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உரிய 2012, 2013, 2014 ஆம் வருடங்களில் க. பொ. த. (உ. த.) சித்தி அடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன ;

(ஆ) பயிற்சியின் பின் நியமிக்கப்பட்ட மாகாணத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் சேவை செய்ய விருப்பம் தெரிவித்தல் வேண்டும் ;

(இ) உடல், உள தகுதியுடன் சுகதேகியாகவும் இருக்க வேண்டும் ;

(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் திகதிக்கு முன் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக வசித்து வருபவராக இருக்க வேண்டும்.

**5. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவம் தயாரித்தல் வேண்டும். அதற்காக ஏ4 அளவுப் பத்திரத்தை உபயோகித்தல் வேண்டும். அவ்விண்ணப்பப்பத்திரத்தில் 1 இலிருந்து 10(அ) வரை 1 ஆம் பக்கத்திலும் 10(ஆ) இலிருந்து 13 வரை 2 ஆம் பக்கத்திலும் வரும் வகையிலும் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தில் ''பற்றுச்சீட்டு'' எனும் இடத்தில் ''இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளை, இலக்கம் 7041318 எனும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக் கட்டணம் சேகரித்தல் எனும் கணக்கிற்கு'' 300 ரூபா செலுத்தி அந்தப் பற்றுச்சீட்டு கழராத வகையில் ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டமுன் அதன் பிரதியொன்றை எடுத்துக் கொள்ளவும்.)

(இ) இலங்கை நிர்வாக சேவை/கல்விச் சேவை/அரச கணக்காளர் சேவை/ அரச பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 2,40,360 ரூபாவுக்குக் குறையாத சம்பளத்தைப் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஆகியவர்களில் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை கடித உறையில் இட்டு அந்தக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''துணை மருத்துவ சேவையில் குடும்ப நல உத்தியோகத்தர் பயிற்சிக்காக பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு - 2015'' என எழுதப்பட்டு பதிவுத்தபாலில் 2015.07.24 ஆந் திகதிக்கு முன் மேற்படி முகவரிக்கு கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.

6. அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த தாபனங்களில் சேவை செய்வோர் தமது விண்ணப்பங்களை அவர்களது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். மேலும் இது வெளியில் இருந்து இணைத்துக்கொள்ளல் என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது.

8. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அல்லது உரிய படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. மேற்குறிப்பிட்ட தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளில் Z புள்ளிகளின்படி தயாரிக்கப்படும் முதன்மைப் புள்ளிகளின் ஆவணத்தினூடாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் மாத்திரம் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் அடங்கிய நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். கீழே குறிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி Z புள்ளிகள் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழின் மூலப்பிரதி (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.) ;

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி ;

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திரம் (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.)

(உ) மேற்படி 4(ஈ) இன் பிரகாரம் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரினால் துணை ஒப்பம் இடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிடம் தொடர்பான சான்றிதழ் (கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்) ;

(ஊ) தான் திருமணமாகாதவர் என்பதை நிரூபிக்க சமாதான நீதவான் ஒருவரின் முன்னிலையில் கையொப்பமிட்ட முறையான சத்தியக்கடதாசி ;

(எ) சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் அல்லது பல்கலைக்கழகம் அல்லது வேறு அரசாங்கத் தாபனங்களில் அல்லது வேறு எந்த முழுநேரப் பயிற்சி நெறியொன்றையும் தொடரவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான சத்தியக்கடதாசி.

10. **பயிற்சி வழங்கும் நியதிகள்** :

(i) நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் உரிய பயிற்சிநெறிக்காக அந்தந்த பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவர். பயிற்சியாளர்களுக்கு சிங்களம்/தமிழ் மொழி மூலம் பயிற்சிகள் வழங்கப்படும்.

(ii) பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுகின்ற பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலையின் நடைமுறையிலிருக்கும் சட்ட விதிகளுக்கும் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மூலம் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(iii) பயிற்சிக் காலத்தினுள் நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் அல்லது செயற்பாடுகள், நடத்தைகளில் அதிருப்தி கண்டறியப்படும் அல்லது பயிற்சிப் பாடசாலை விதிமுறைகளைப் பின்பற்றத் தவறும் பயிற்சியாளர்கள் இப்பயிற்சிக் காலத்தின் எச்சந்தர்ப்பத்திலும் எதுவித நட்டஈடுகளும் வழங்கப்படாமல் விலக்கப்படுவர்.

(iv) இப்பயிற்சிக் காலத்தின்போது பயிலுனர்களுக்கு மாதாந்தம் 12,360 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும் ;

(v) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப் படும்போது பயிலுனரானவர் தமது பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதாகவும், பயிற்சியின்போது அதனை விட்டு விலக மாட்டேன் எனவும், பயிற்சியின் பின் உரிய நியமனம் வழங்கப்படின் ஆகக்குறைந்தது 10 வருடங்கள் உரிய மாகாணத்தில் சேவையாற்றுவேன் எனவும், சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது பயிற்சியில் தொடர முடியாவிடின் அல்லது மேற்குறிப்பிட்ட III இன் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று 10 வருடங்கள் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் அல்லது உரிய மாகாணத்தில் சேவையாற்றுவதற்கு தவறுமிடத்து அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கு பயிலுநர் மீள் செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப் பெறுவதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

11. **சேவைக்கு நியமிக்கும் விதிகள்**.- பயிற்சியின் இறுதியில் நிரந்தர நியமனம் செய்தல் அரசாங்கத்தின் கட்டாயமல்ல. ஆனாலும் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பாடநெறிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு மற்றும் மாகாணத்திலுள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் உரிய பதவி III ஆம் வகுப்பிற்கு நியமிப்பது தொடர்பில் கவனம் எடுக்கப்படும். முதல் நியமனத் திகதியில் இருந்து 10 வருடத்திற்கு முதல் நியமனம் வழங்கப்பட்ட இடத்தில் சேவை செய்வது கட்டாயமாகும்.

பயிற்சிநெறி முடிவில் நடத்தப்படும் இறுதி எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் மூலம் தயாரிக்கப்படும் திறமை அட்டவணை அடிப்படையில் மாகாண மட்டத்தில் 70% ஆட்சேர்த்துக்கொள்ளப் படுவதுடன் நாடு முழுவதிலுமிருந்து திறமை அடிப்படையில் 30% ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை கருத்திற்கொண்டு வெற்றிடங்கள் உள்ள இடங்களில் நியமனங்கள் வழங்கப்படும். அதன்போது பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2004 (iv) இன் MT 05 2006A (ரூபா 15,260 - 180 x 6 - 240 x 4 - 320 x 20 - 360 x 20 - 28,020) எனும் ஆரம்ப சம்பளப் படிமுறையில் இட்டுச் சம்பளம் வழங்கப்படும்.

12. விண்ணப்பங்களை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பவும். பயிற்சிகளின்போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப் படின் பயிற்சியிலிருந்து, சேவையிலிருந்து இடைநிறுத்தப்படவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு திருப்தியின்மை பட்டியலில் பெயரைச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் பயிற்சிக் காலத்தில் தங்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங்கள், பிணைக்கான நிதி என்பவை செலுத்த வேண்டும். இல்லையேல் அதனைப் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் உரிய பயிற்சிக் காலத்தில் மற்றும் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையினை மேற்கொள்ளக் கூடியதாக தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்கான மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதிற்றவர் பயிற்சியைத் தொடர்தல் நிராகரிக்கப்படும்.

14. மேற்கூறப்பட்டபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் அரச சேவைக்கான அனைத்துச் சட்டங்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கு ஏற்பவும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக் காலம் ஏற்படுத்தும் அரச சட்ட ஒழுங்கு மாற்றங்களுக்குக் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

15. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும். இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் ஏதாவது முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழியில் உள்ளதே சரியானது எனக் கவனத்தில் எடுக்கப்படும்.

16. பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குவதற்கான வசதி அமைச்சினால் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு வழங்கப்படின் அதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இட வாடகை மற்றும் நீர், மின் கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

17. இப்பயிற்சிக் காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தனியார் சேவைகளில் ஈடுபடுவதற்கு உரிமை இல்லை. அவ்வாறு பயிற்சியின் பின் நீங்கள் உரிய பதவிக்கு நியமிக்கப்படின் அதன் பின் தனியார் சேவையில் ஈடுபடுவதற்கும் உரிமை இல்லை. அவ்வாறு ஈடுபட்டால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

கலாநிதி டி. எம். ஆர். பி. திசாநாயக்க,
செயலாளர்,
சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிறிபாய", இல. 385, வண. பத்தேகம
விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2015, யூன் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**துணை மருத்துவத் துறையின்கீழ் குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு - 2015**

விண்ணபத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானியின் அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/தமிழில்) :----.
* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :----.

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில், உ+ம் A. B. C. SILVA) :----.

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. (பிரதியொன்றை இணைக்கவும்) :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. தபால் முகவரி : சிங்களத்தில்/தமிழில் ஆங்கிலத்தில்

.............................. ..............................
.............................. ..............................
.............................. ..............................
.............................. ..............................

4. (அ) நிரந்தர முகவரி : சிங்களத்தில்/தமிழில் ஆங்கிலத்தில்

.............................. ..............................
.............................. ..............................
.............................. ..............................
.............................. ..............................

(ஆ) தொலைபேசி இலக்கம் :
கையடக்க :----. நிலையான :----.

(இ) வசிக்கும் மாவட்டம் (சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில்) :----.

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா ?
ஆம்/இல்லை :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி

2015.07.24 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

6. உயரம் : ---- அடி ---- அங்குலம்.

7. பால் :

ஆண் ☐ பெண் ☐

8. இலங்கைப் பிரசையா ?

ஆம் ☐ இல்லை ☐

9. விவாக நிலைமை :

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

10. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (உ. த.) பரீட்சை Z புள்ளியுடனான பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதிசெய்த பிரதியை இணைக்கவும்.

பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டம் :----.
பாடத்துறை :----.
பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு :----.
சுட்டெண் :----.
Z புள்ளி :----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

க. பொ. த. (சா. த.) பரீட்சை பெறுபேற்றுப்பத்திரம் (உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுப் பத்திரத்தை இணைக்கவும்.) :

| | பாடம் | முதலாம் அமர்வு | இரண்டாம் அமர்வு |
|---|---|---|---|
| | | வருடம் | வருடம் |
| | | சுட்டெண் | சுட்டெண் |
| 1 | சிங்கள மொழி/ தமிழ் மொழி | | |
| 2 | கணிதம் | | |
| 3 | விஞ்ஞானம் | | |
| 4 | ஆங்கிலம் | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |
| 10 | | | |
| 11 | | | |
| 12 | | | |

11. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(பொத்தமான கூட்டில் " ✓ " குறியிடுக.

ஆம் எனில் தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :-------------------------------------------------------------------------------------
----------------------------------------------------

12. **விண்ணப்பதாரியின் உறுதி மொழி :**

(அ) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நன்கு வாசித்தும் அதிலுள்ள நிபந்தனைகளை நன்கு அறிந்தும் என்னால் இவ்விண்ணப்பப்பத்திரம் நிரப்பப்பட்டதென்றும் நான் எந்தவொரு முழுநேர பாடநெறியில் ஈடுபடவில்லை என்றும் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மை யானவை எனவும்,

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நான் நன்கறிவேன்.

| பற்றுச்சீட்டை கழராத விதத்தில் இங்கு ஒட்டவும் |
|---|

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான செல்வி ...................................... அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................ ஆந் திகதி இட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்)

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

6-604

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.